[24th January 1964

திரு. எம். சுப்பையா செட்டியார்: இது ஜனங்களுக்கு யார் வினியோகம் செய்கிறார்கள்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: புரக்யூர்மெண்ட் செய்ய மத்திய ரீஜினல் டைரக்டரிடத்தில் கொடுத்துவிடுகிறோம்.

திரு. எம். சுப்பையா செட்டியார்: பர்மா அரிசியைப் பற்றி கேட்கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: பர்மா அரிசி ஆங்காங்குள்ள நமது நியாய விலைக்கடைகள் மூலம் வினியோகம் செய்யப்படுகிறது.

திரு. எம். சுப்பையா செட்டியார்: நியாயவிலைக் கடைகள் என்பது கூட்டுறவு ஸ்தாபனமா? இதர வியாபாரிகளும் செய்துவருகிறார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: தனியாரும் செய்கிறார்கள்.

திரு. எம். சுப்பையா செட்டியார்: இதுவரையில் பர்மா அரிசி நியாயவிலைக் கடைகளில் வினியோகம் செய்யப்படாமல் வெளியே தவறாக விற்கப்படுவதைக் கண்டுபிடித்து அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அதுதான் இன்வெஸ்டிகேஷனில் இருப்பதாகச் சொன்னேன்.

திரு. எம். சுப்பையா செட்டியார்: ஒரு வருஷமாகிவிட்டது. இன்னும் இன்வெஸ்டிகேஷனில் இருக்கிறது என்றால் எப்போது தான் முடிவு ஏற்படும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சுலபமாக கண்டுபிடிக்கக் கூடிய குற்றங்களாக இருந்தால் சீக்கிரம் கண்டுபிடிக்க முடிகிறது. இந்தக் குற்றத்தில் நாம் வினியோகம் செய்யும் அரிசி யாரிடத்திலிருந்து வந்தது என்று தெரியவில்லை. அது ராஜ்யத்திற்கு வெளியே இருக்கிற கன்சைனீ பேருக்கு அனுப்பப்பட்டது. விஷயம் தெரிந்த பிறகு இடையிலே அதை மறித்து நிறுத்தப்பட்டது. யார் அனுப்பினார்கள், எப்படி வந்தது என்பது இன்வெஸ்டிகேஷனில் இருக்கிறது 5—6—1963-ல் தான் இந்த புகார் எடுத்துக்கொள்ளப்பட்டது. அது இப்போது இன்வெஸ்டிகேஷனில் இருக்கிறது.

* 44 *Q.*—Dr. A. SREENIVASAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there was any seizure of Burma rice in the City of Madras recently; and

(*b*) if so, how the persons concerned were able to procure it?

The Hon. Sri R. VENKATARAMAN (on behalf of the Hon the Minister for Food) : (*a*) Yes.

(*b*) The matter is under investigation.